## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினதும் அதன் துணைக்கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வெளிநாட்டவர்களின் வருகையை சீராக்குவதற்காக வேலைவாய்ப்பு முகவர்களால் 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தாக பணியகத்தில் ரூபா 258,832 தொகை வைப்பிலிடப்பட்டிருந்தது. அப் பணம் நாட்குறிப்பின் மூலம் வெளிநாட்டவர்களின் வருகையை சீராக்குவதற்கான செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் அதே தொகையால் குறைவடைந்திருந்தது.

### 1.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்கு விபரம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதி | ஒருங்கிணைந்த பட்டோலைகளின் படியான மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| இடர் கடன் மீதி | 155,216,941 | 155,213,833 | 3,108 |
| வாகனக் கடன் மீதி | 83,358,631 | 83,405,346 | 46,715 |
| முகவர் கடன்கொடுத்தோர் | 215,943,664 | 223,590,871 | 7,647,207 |
| வசதி வழங்கல் கட்டணம் | 56,818,485 | 56,673,000 | 145,485 |
| ஊழியர் உடன்படிக்கை கட்டணம் (தூதுவர் சபை) | 1,446,958,337 | 1,446,843,893 | 114,444 |

### 1.2.3 தொங்கல் கணக்குகள்

நானாவித கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 148,865 தொகையான தொங்கல் கணக்கு மீதி காணப்பட்டதுடன் இதனைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வெளிநாட்டவர்களின் வருகையை சீராக்குவதற்காக தீர்மானமெடுக்கையில் உரிய வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களால் பணியகத்தில் வைப்புச் செய்யப்படும் பணம் உரிய வெளிநாட்டவர்களுக்கு உரிய காலங்களில் செலுத்தப்படாது பணியகத்தால் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டு முதல் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அவ்வாறு பிடித்து வைக்கப்பட்டிருந்த பணத்தொகை ரூபா 13,741,167 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2003 ஆம் ஆண்டு முதல் 2012 திசெம்பர் 31 வரை வெளிநாட்டு தூதரகங்களால் அறவிடப்பட்டு திறைசேரியினூடாக 2003 ஆம் ஆண்டு முதல் பணியகத்திற்குக் கிடைக்கவேண்டிய ரூபா 2,596,463,468 கூட்டுத்தொகையான ஊழியர் ஒப்பந்த உடன்படிக்கைக் கட்டணங்களில் ரூபா 1,446,843,893 தொகையான பணம் பணியகத்திற்குக் கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்டது.

(இ) 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை காப்புறுதி நட்டஈடாகக் கிடைக்கப்பெற்ற தொகையில் ரூபா 3,629,174 தொகை உரிய வெளிநாட்டு ஊழியர்களுக்குச் செலுத்தப்படாது கடன்கொடுத்தோராக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 1990 ஆம் ஆண்டின் போது ஈராக் நாட்டால் குவைட் நாடு ஆக்கிரமிக்கப்பட்டமையால் அங்கு தொழில் புரிந்த இலங்கையர்களுக்கு நேர்ந்த இடர்களுக்கான நட்டஈட்டைச் செலுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் நட்டஈட்டு ஆணைக்குழுவால் கிடைக்கப்பெற்ற தொகை அவர்களுக்கு செலுத்தப்படும் வரை தற்காலிக வைப்புக்களில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தன. அவ் வைப்புகளுக்காக உரிய காலஎல்லைக்குள் உழைக்கப்பட்ட வட்டித்தொகையும் அந் நிதியத்தில் செலவில் வைக்கப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மேலும் ரூபா 2,431,078,149 தொகையான மீதி நிலவியது. அத் தொகையைத் தீர்ப்பதற்கோ அல்லது திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கோ மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பணியகத்தால் பல்வேறு நிறுவகங்களுக்கு ரூபா 6,195,396 தொகை வைப்பிலிடப்பட்டிருந்ததுடன் அவற்றை அறவிடுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | தொகை |
|---|---|
| | ரூபா |
| மீளச் செலுத்த வேண்டிய வைப்புகள் | 167,358 |
| ஏனைய பெறவேண்டியவைகள் | 642,875 |
| இத்தாலியில் உள்ள இலங்கைத் தூதரகம் | 887,610 |
| நானாவித வைப்புகள் | 4,497,553 |
| | 6,195,396 |

(ஊ) 18 உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாக உள்ள ரூபா 4,918,736 தொகையான இடர் மற்றும் வாகனக் கடன் மீதி 05 மாதங்கள் முதல் 60 இற்கு இடையிலான வீச்சில் அறவிடப்பட்டிராதிருந்தது.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | | பெறுமதி | | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| நானாவித வைப்புகள் | - வரவு | 167,358 | (அ) | நானாவித வைப்புகள் |
| | - செலவு | 26,832,000 | (ஆ) | வைப்புப் பற்றுச்சீட்டுக்கள் |
| நானாவித கடன்கொடுத்தோர் | | 74,509,860 | (அ) | விபரமான பட்டோலை |
| | | | (ஆ) | மீதிகளின் உறுதிப்படுத்தல் |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1985 இன் 21 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரச்சட்டம் | |
| 15 ஆம் பிரிவு | பணியகத்தின் நோக்கம் வெளிநாட்டு ஊழியச் சந்தையில் இலங்கை ஊழியர்களுக்கு உயர்ந்த வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் இதற்கு முரணாக கரப்பந்தாட்ட விளையாட்டை ஊக்குவிப்பதற்காக ரூபா 1,000,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நி.பி 371 (2) | 31 சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்ட ரூபா 3,645,507 கூட்டுத்தொகையான முற்பணம் 2012 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிராததுடன் சில உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணத்தைத் தீர்ப்பதற்கு 03 ஆண்டுகளுக்கும் மேலான காலம் கடந்திருந்தது. |

(ii) நி.பி. 756 — ஸோல் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் இயங்கிய வெளிநாட்டு சேவை முகவர் அலுவலகத்தால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நி.பி. 1646 — பணியகத்தின் சகல குழாம் வாகனங்களுக்கும் உரிய நாளாந்த ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 போதிய அதிகாரத்தால் சான்றுறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

ஜப்பானில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் ஊழியர் நலன்புரிப் பிரிவிற்காக ஊழியர் நலன்புரி உத்தியோகத்தர் பதவி அங்கீகரிக்கப்பட்டிராத போதிலும் 2012 ஆம் ஆண்டிற்காக அவ் அங்கீகரிக்கப்பட்டிராத பதவிகளுக்காக பணியகத்தால் ஈடுபடுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தருக்காக ரூபா 5,103,405 தொகை சம்பளம் மற்றும் படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் பணியகத்தினதும் துணைக்கம்பனியினதும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு வருமான வரிக்கு முன்னர் ரூபா 258,895,523 மிகையினை விளைவித்திருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 598,382,192 மில்லியனாக இருந்தமையால் மீளாய்வாண்டின் ஒருங்கிணைந்த நிதி விளைவில் ரூபா 339,486,669 அதாவது 57 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஊழியர் நலன்புரி நிதியச் செலவினங்கள், செயற்பாட்டுச் செலவினங்கள், நிர்வாகச் செலவினங்கள் மற்றும் வியாபார மேம்பாட்டு செலவினங்கள் முறையே ரூபா 268,054,810 ஆலும், ரூபா 52,940,739 தொகையாலும், ரூபா 30,604,247 தொகையாலும் ரூபா 27,660,538

தொகையாலும் அதிகரித்தமை நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

**2.2 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்**

பணியகத்திற்கு எதிராக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளித் தரப்பினரால் 11 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் பணியகத்தால் வெளித்தரப்பினருக்கு 303 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

**2.3 செலவினங்களின் வழமைக்கு மாறான அதிகரிப்பு**

மீளாய்வாண்டின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட செலவினங்கள் தொடர்பான விபரங்களின் படி பின்வருமாறு மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டினதும் செலவினங்களுக்கு இடையிலான அசாதாரண அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

| செலவின வகை | 2012 | 2011 | முரண் | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வியாபார மேம்பாட்டு – வெளிநாடு தூதரக பணியகங்களில் | 49,357,705 | 17,857,135 | 31,500,570 | 176 |
| மாநாடுகளும் செயலமர்வுகளும் | 8,474,920 | 2,576,038 | 5,898,882 | 229 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீட்டு வேலைகளில் ஈடுபடுபவர்களால் அவர்களுக்கு நேரும் இடர் தொடர்பாக முறைப்பாடுகளைச் செய்வதற்காக பணியகத்தின் முறைப்பாட்டுத் தீர்ப்பனவுப் பிரிவு இயங்கி வந்தது. ஆப் பிரிவிற்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் விசாரணை செய்து தெளிவான தீர்வுகள் வழங்கி அவற்றைத் தீர்த்ததன் பின்னர் உரிய கோவைகளின் வேலைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்காக முறையான தீர்வுகள் வழங்கப்படாது தொலைபேசி அழைப்புகளின் மூலம் உரிய முறைப்பாடுகளை கேட்டு விலக்கியதாக குறிப்பிடப்பட்டு முறையற்ற கடிதங்களின் மூலம் முறைப்பாட்டைத் தீர்த்ததாக கோவைகளில் குறிப்புகள் பதிவு செய்து வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது ஊழியர் நலன்புரி செயற்பாடுகள் தொடர்பான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

(i) கல்வி இடைநடுவில் நிறுத்தப்படும் வெளிநாட்டவர்களின் பிள்ளைகளுக்கு தொழிற்துறைக் கல்வி மற்றும் பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு நிதி ரீதியானதும் ஆலோசனைச் சேவையையும் வழங்குவதற்காக 500 மாணவர்களின் இலக்கு 2012 ஆம் ஆண்டின் போது செயற்பட்டிருந்த போதிலும் பயிற்சிகளுக்காக 16 பிள்ளைகளுக்கு மாத்திரம் நிதி உதவி வழங்கப்பட்டிருந்தது.

(ii) வெளிநாட்டு வேலையின் போது நேரும் விபத்தினால் முழுமையாக அங்கவீன நிலைக்கு உட்பட்டு இந்நாட்டிற்கு வருகை தந்த குடியகன்றோரின் வருமான நிலையை மேம்படுத்துவதற்காக சுயவேலைவாய்ப்பின் மூலம் வருமானத்தைப் பெருக்கும் நோக்கில் அத்தகைய 50 பேருக்கு உதவி வழங்குவதற்காக ரூபா 1.3 மில்லியன் தொகை 2012 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்

போது இரு அங்கவீனமுற்றோருக்கு மாத்திரம் சுய தொழில் உதவி வழங்கப்பட்டிருந்தது.

(இ) குடியகன்றோருக்காக கதிர்காம சுற்றுலா விடுதி ஒன்றை நிர்மாணிப்பதற்காக 1 ஏக்கர் 0 ரூட் 19.5 பேர்ச் அரசிற்கு உரித்தான காணி ஒன்று 1997 ஆகஸ்ட் 11 ஆம் திகதி பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் இறுதியளவில் அந் நிர்மாணிப்பிற்கு உரிய திட்டம் வரிசை அமைச்சிற்கு அனுப்புவதற்கும் காணியின் மண் பரிசோதனைக்காக மனுக் கோரலும் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

2012 ஆம் ஆண்டின் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தால் உழைக்கப்பட்ட வருமானமாக ரூபா 340 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் சேகரிக்கப்பட்ட ரூபா 629 மில்லியன் வருமானத்தில் மீளச் செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்படாத சேவை வழங்குனரின் வைப்புகளும் பாதுகாப்பு வீடுகளின் வைப்புகளின் கூட்டுத்தொகை ரூபா 345 மில்லியன் கழிக்கப்பட்டதை அடுத்து ரூபா 284 மில்லியன் தொகையான உள்ளபடியான வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 56 மில்லியன் தொகை அதாவது மதிப்பிடப்பட்ட மொத்த வருமானத்தில் 16 சதவீதத்தைச் சேகரிப்பதற்கு முடியாதிருந்தது. இவ்வாறே உயர் ஸ்தானிகர் அலுவலக மட்டத்திலும் வருமான இலக்கை எய்தியிராமை அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| உயர் ஸ்தானிகர் அலுவலகம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | முரண் | |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | சதவீதம் |
| ஜெடா | 16 | 05 | 11 | 69 |
| லெபனான் | 20 | 11 | 09 | 45 |
| கட்டார் | 110 | 64 | 46 | 42 |
| அபுதாபி | 16 | 10 | 06 | 38 |

**3.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உதவிக் காப்புறுதி நிதியத்தின் நட்டஈட்டைச் செலுத்தும் நிபந்தனையில் 1.1 பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு வேலைக்குச் சென்று பாரியளவில் பாதிப்பிற்குள்ளானவர்கள் மீள இந்நாட்டிற்குக் கொண்டுவரும் நடவடிக்கையின் கீழ் விமானப் பயணச்சீட்டுக் கட்டணம், நிதியத்தின் மூலம் ஏற்கப்பட வேண்டும். மீளாய்வாண்டின் போது பாரியளவில் பாதிப்பிற்குள்ளான 524 குடியகன்றோரின் ரூபா 18,348,183 கூட்டுத்தொகையான விமானப் பயணச்சீட்டுக் கட்டணம் ஊழியர் நலன்புரி நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்ததுடன் காப்புறுதி நிதியத்திலிருந்து மேவப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பணியகத்தால் அறவிடப்படும் பதிவுக் கட்டணமும் கொரியப் பயிற்சிக் கட்டணமும் சரியாகச் சேகரித்து கணக்கீடு செய்யப்படுவதற்காக முறையான நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) ரியாத், குவைட், ஜெடா, ஜோர்தான் கட்டார், ஓமான் மற்றும் லெபனான் போன்ற மத்தியகிழக்கு நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்ட வேலைவாய்ப்பு முகவர் நிறுவகங்களின் மூலம் அந்நாட்டில் உள்ள தொழில் வழங்குனரின் வேலைத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்காக தேவையான உழைப்பாளிகள் இலங்கையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவகத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. அங்கு தொழில் வழங்குனர் தொடர்பாகவும் ஊழியர்கள் தொடர்பாகவும் முகவர் நிறுவகத்தால் முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வேலைத் தேவைப்பாட்டை பூர்த்திசெய்வதற்கு தேவையான முறையான நடவடிக்கை பணியகத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் 2012 ஆம் ஆண்டின் போது சேவைக் காலம் பூர்த்திசெய்யப்பட முன்னர் 1428 ஊழியர்கள் மீளக் கூட்டிவருவதற்கும், தூதரக பாதுகாப்பு வீடுகளில் 671 குடியகல்வோர் தங்கியிருந்தமையும், தடுக்க

முடியாதிருந்தது. இவ்வாறே குடியகல்வாளர்களிடமிருந்து பெறப்பட்டிருந்த 12681 தொகையான முறைப்பாடுகளின் எண்ணிக்கையும், அந்நாட்டில் சிறையில் உள்ள 202 குடியகல்வாளர்களின் எண்ணிக்கையும் குறைவான நிலையில் பேணப்படுவதற்கு முடியாதிருந்தது.

(ஈ) சர்வதேச குடியகல்வு தினத்திற்காக ரூபா 26,466,500 தொகையான செலவினம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அம் மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கு மேலாக ரூபா 1,182,381 தொகை செலவிடப்பட்டிருந்தது. ரீசேட், தலைக்கவசங்கள், குடைகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்தல், அறிவித்தல் பத்திரங்கள் மற்றும் கலன்டர் அச்சிடல், விழா மண்டபங்களின் செலவினம் மற்றும் லொறியைச் சோடித்தல் போன்றவற்றிற்கு இதில் ரூபா 24,079,633 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(உ) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரச்சட்டத்தின் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவகங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல், அனுமதிப்பத்திரம் கொண்டவருக்கு இருக்க வேண்டிய தகைமைகளைத் தீர்மானித்தல், பிணை வைப்புக்களை தீர்மானித்தல், அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்தல், இரத்துச் செய்வதற்காக பணியகத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் மூலம் அனுமதிப்பத்திரத்திற்காக உயர் கட்டுப்பாட்டையும் குடியகலும் ஊழியர்களைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மாறாக பணியகத்தால் ரூபா 5,000 ஆன தொகைக்கு வெளிநாட்டு தொழில் மேம்பாட்டு உதவியாளர்களை பதிவுசெய்யும் முறையை 2012 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், வெளிநாட்டு தொழில் மேம்பாட்டு உதவியாளர்களைப் பதிவுசெய்வதற்காக தேசிய அடையாள அட்டையின் ஓர் பிரதி, கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் மற்றும் சத்தியக் கடதாசி மாத்திரம் கருத்திற்கொள்ளப்பட்டு 434 தொழில் மேம்பாட்டு உதவியாளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

(ஊ) 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவகத்தைப் பதிவு செய்தலைக் கோரி ரூபா 3,460,000 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் பெறப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந் நிறுவனத்தைப் பதிவுசெய்யவோ அல்லது அவ்வாறு செய்ய முடியாவிடின் அத் தொகையை மீளப் பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தின் உத்தியோகத்தர்களால் 2012 செப்தெம்பர் 02 முதல் 09 வரை இத்தாலி சுற்றுப் பயணம் ஒன்று திட்டமிடப்பட்டிருந்தது. அச் சுற்றுலா 2012 செப்தெம்பர் 09 முதல் 16 வரை கால தாமதமாகிய காரணத்தால் ரிக்கட்கள் இரத்துச் செய்யும் மற்றும் மீளக் காப்புறுதி பெற்றுக் கொள்ளும் கட்டணமாக ரூபா 32,342 தொகையான மேலதிகத் தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பணியகத்தினால் வெளிநாட்டு சேவைகள் பயிற்சி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக நீர்கொழும்பு பிரதேச சபைக்கு உரித்தான 4 ஏக்கர் காணி 2003 செப்தெம்பர் 03 ஆம் திகதி முதல் 30 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை செலுத்தப்பட வேண்டிய ரூபா 380,000 தொகையான வருடாந்த குத்தகைப் பணம் 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை 5 ஆண்டுகளுக்கான காலப்பகுதிக்காக செலுத்தப்படுவதற்குத் தவறியமையால் 3 ஆண்டுகால தாமதக் கட்டணமாக 30 சதவீதம் தண்டப்பணமான ரூபா 342,000 தொகை பணியகத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.5 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பணியகத்தின் பயிற்சி நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்காக ஹொமாகம பிடபன பகுதியில் 05 ஏக்கர் காணியொன்றை 50 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில்

குத்தகைக்கிடப்படுவதற்கு 2010 நவம்பர் 03 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2010 சனவரி 15 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளக மதிப்பீட்டுக் குழுவால் இது ரூபா 52 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்டிருந்தது. 2010 பெப்ரவரி 26 ஆம் திகதி அப் பெறுமதியில் 50 சதவீதம் அதாவது ரூபா 26 மில்லியன் பணியகத்தால் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2010 மார்ச் 04 ஆம் திகதிய 10/08/2426 ஆம் இலக்க உடன்படிக்கையின் மூலம் காணியின் பௌதீக உரிமை பணியகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவ்வாறே காணிக்காக மிகுதித் தொகையைச் செலுத்துமாறு அதிகாரசபையால் 2011 செப்தெம்பர் 15 ஆம் திகதிய 5/5/10/1/11/3 Pro 21V ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இக் காணி தொடர்பாக பிரதான மதிப்பீட்டாளரால் மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு போதிய கவனம் செலுத்தப்படாது 50 சதவீதக் கொடுப்பனவை மேற்கொண்டிருந்ததுடன் பணியகத்தால் 2013 மே 14 ஆம் திகதி வரை அக் காணி உரிய பணிக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 வேறு அரச நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட பணியகத்தின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.3.9 ஆம் பந்தியின் பிரகாரம் அரச முயற்சிகளின் வளங்கள் வரிசை அமைச்சினால் பயன்படுத்தப்படலாகாது என்ற போதிலும் பணியகத்திற்குரிய மற்றும் வாடகைக்கு எடுக்கப்பட்ட 06 வாகனங்கள் அமைச்சு மற்றும் சனாதிபதி அலுவலகத்தால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக பணியகத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 4,459,024 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மேற்குறித்த சுற்றறிக்கைக்கு முரணாக பணியகத்தின் உத்தியோகத்தர்கள் நால்வர் அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களில் கடமையில் ஈடுபட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் ரூபா 2,085,345 தொகை பணியகத்தால் சம்பளம் மற்றும் படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் இவ்வாறே வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சின்

நடவடிக்கைகளுக்காக 09 சந்தர்ப்பங்களிற்கு உரித்தான ரூபா 839,266 கூட்டுத்தொகை பணியகத்தால் செலவிடப்பட்டிருந்தது.

### 3.7 பதவியணி நிர்வாகம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணியகத்திற்கு உரித்தான பதவியணி விபரம் பின்வருமாறாகும்.

| பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | மிகையான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பதவிநிலை | 237 | 257 | 20 | - |
| பதவிநிலையற்ற | 472 | 541 | 69 | - |
| சிற்றூழியர்கள் | 178 | 133 | - | 45 |
| மொத்தம் | 887 | 931 | 89 | 45 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 செப்தெம்பர் 06 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ4/46/4/27/274/1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் பதவியணி மறுசீரமைப்பு தீர்மானத்தின் பிரகாரம் பணியகத்திற்கான 24 பதவிகளுக்காக 887 பதவியணி அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 931 பதவியணியினர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். இவர்களில் ஒப்பந்த, இரண்டாம் நிலை மற்றும் ஒப்படை அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை முறையே 83, 15 மற்றும் 03 பேரைக் கொண்டிருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்படாத 09 பதவிகளுக்காக 17 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 7,238,789 தொகை 2012 ஆம் ஆண்டின் போது சம்பளங்கள் மற்றும் படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.8 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பணியகத்தில் 57 வாகனங்கள் இருந்ததுடன் இவற்றில் 31 குழாம் வாகனங்கள் காணப்பட்டன. 2012 சனவரி மாதம் முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரை பணியகத்தின் நாளாந்த ஓட்டத் தேவைப்பாட்டிற்காக பணியகத்தின் வாகனங்கள் முறையாக பயன்படுத்தப்படாது வாடகை வாகனங்களுக்காக பல நிறுவகங்களுக்கு ரூபா 14,038,184 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2008 யூலை 28 ஆம் திகதிய பீஈடீ – 50 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக பணியகத்தின் உத்தியோகத்தர்களால் முறையான அங்கீகாரம் இன்றி எல்லைக்கு மேலாக மேலதிக எரிபொருள் பெறப்பட்டிருந்தது.

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

## 4.1 செயற்பாட்டுத்திட்டம்

கூட்டுத்திட்டம் மற்றும் செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்படுவது தொடர்பாக 2012 சனவரி 13 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை பணியகத்தின் உயர் முகாமைத்துவமும் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்காக விடுதிசார் செயலமர்வு நடாத்தப்படுவதற்காக ரூபா 1,769,315 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறு தயாரிக்கப்பட்டிருந்த கூட்டுத்திட்டமும் செயற்பாட்டுத்திட்டமும் அடிக்கடி திருத்தப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்கு உரித்தான திருத்தப்பட்ட செயற்பாட்டுத்திட்டம் கணக்காண்டின் முடிவின் பின்னர் 2013 மார்ச் 15 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வாகனக் கட்டுப்பாடு

(இ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களிலான நடவடிக்கைகளை நெறிப்படுத்தி கட்டுப்படுத்தல்.

(ஈ) வருமானச் சேகரிப்பு

(ஊ) சொத்துக் கட்டுப்பாடு